FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301631

1. District : Madurai PS: NAAC Year: 2026 FIR No.: 09/2026 Date: 18.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7, 7A of PC Act 1988 as
(ii) Act சட்டம்: by prevention of corruption Sections பிரிவுகள்: amended by PC (Amend
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 and BNSS Act Sections பிரிவுகள்: Act 2018 and 106 BNSS
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 17.07.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 17.00hrs Time to : 23.00hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 18.07.2026 Time : 12.45 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 18.07.2026 Time : 13.30 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Typed complaint.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: South, 27 km
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : o/o Thasildar, Thirumangalam
முறைக் காவல் எண் முகவரி Taluk office, Madurai District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. P. Jayasharmila (b) Father's/ ~~Husband's~~ Name : Palani
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : — (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Inspector (g) Address : o/o District Integration Cell officer,
தொழில் Cell officer / Thasildar முகவரி Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) Tr. R. Sivan Kalyani, Age 26/2026, S/o Rajiyalekshmi, Field Assistant, Survey Section, o/o Thasildar, Thirumangalam Taluk, Madurai District and 6 others [Names of the other Accused mentioned in seperate sheet]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— Nil —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached separate sheet page 3 to 11

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr.T.Sivakala Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS. V.A.C., Madurai .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.7.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

18/7/2026
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 18.07.2026 14.30hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K.Kuruvaraguru
Rank: நிலை Inspector of Police
V.A.C.,
Madurai.

குற்றவாளிகள் பெயர் விபரம் தொடர்ச்சி :

A-2 திருமதி. மு. கனகா, வயது 35/2026,
த/பெ. முத்தையா,
வாக்குசாவடி நிலைய அலுவலர்,
Part No.96,
திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம்
(தனிநபர்)

A-3 திரு. ம. ரமேஷ், வயது 49/2026,
த/பெ. மலைச்சாமி,
கிராம நிர்வாக அலுவலர்,
சாத்தங்குடி பிட் - 2
கொக்குளம் உள்வட்டம்,
திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம்

A-4 திரு. ம. செல்வம், வயது 55/2026,
த/பெ. மரிய சூசை மைக்கேல்,
பிளாட் எண்.3896,
TNVHB, வில்லாபுரம், மதுரை - 625 011
(தனிநபர்)

A-5 மு. தவச்செல்வி, வயது 47/2026,
த/பெ. முத்தையா,
கிராம நிர்வாக அலுவலர்,
பன்னிக்குண்டு,
திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம்

A-6 திருமதி.R.ராஜாராஜேஸ்வரி, வயது 50/2026,
த/பெ. C. அய்யனார் துரைராஜ்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருமங்கலம், மதுரை மாவட்டம்

A-7 திரு. G. செந்தில், வயது 51/2026,
த/பெ. கோபாலகிருஷ்ணன்
வட்ட துணை ஆய்வாளர், நில அளவை பிரிவு,
திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம்

18/7/2026

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மதுரை

Honoured Sir,

Submitted,

இன்று 18.07.2026-ம் தேதி மதியம் 12:45 மணிக்கு, காவல் ஆய்வாளர் K. குமரகுரு ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி. P. ஜெயஷ்மிளா அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 17.07.2026, திடீர் இணை ஆய்வின் போது மேற்படி அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.34,000/-, கைப்பற்றப்பட்ட 4 பதிவேடுகள், சோதனையின் போது அலுவலகத்தில் இருந்த இரண்டு அலுவலர்கள் மற்றும் மூன்று தனிநபர்கள் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திருமதி.P.ஜெயஷர்மிளா, B.Sc., துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 27/2026/ஐ1, நாள் : 18.07.2026 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - வருவாய்த்துறை - திடீர் இணை ஆய்வு - திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், அவ்வலுவலகத்திற்கு வரும் சர்வேயர்கள் (தனிநபர்) மற்றும் பொது தேவைகளுக்காக அரசு வேலையாக வரும் நபர்களிடம் லஞ்சம் வாங்குவதாகவும், அவ்வலுவலகத்தில் பணிபுரியும் சில அலுவலர்கள் லஞ்சப்பணத்தை அவர்களுடைய G-pay App மூலமாக பெறுவதாகவும் கிடைத்த இரகசிய தகவலின் பேரில், நேற்று 17.07.2026-ம் தேதி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டு ரூ.34,000/- பணம் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்க கோருவது - தனி அறிக்கை அனுப்புதல் தொடர்பாக. நேற்று 17.07.2026-ம் தேதியன்று, மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், மேற்படி அலுவலகத்திற்கு வரும் சர்வேயர்கள் (தனிநபர்) மற்றும் பொது தேவைகளுக்காக அரசு வேலையாக வரும் நபர்களிடம் லஞ்சம் வாங்குவதாகவும், அவ்வலுவலகத்தில் பணிபுரியும் சில அலுவலர்கள் லஞ்சப்பணத்தை அவர்களுடைய G-pay App மூலமாக பெறுவதாகவும் இரகசிய தகவல் கிடைத்திருப்பதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.க.குமரகுரு அவர்கள் மதியம் சுமார் 14:45 மணிக்கு என்னிடம் தெரிவித்தார்கள். அதன்பேரில், நான் அத்தகவலை எனது தகவலாளிகள் மூலம் இரகசியமாக விசாரித்து அதனை நான் உறுதி செய்துவிட்டு, திடீர்

இணை ஆய்வு மேற்கொள்வதற்கு ஒப்புதல் தெரிவித்தேன். அதன்பேரில், மதுரை ஊ.த.க. பிரிவு அலுவலகத்திலிருந்து காவல் ஆய்வாளர் திரு.குமரகுரு அவர்கள், காவல் ஆய்வாளர் திருமதி.ஜெயப்பிரியா மற்றும் காவல் குழுவினருடன் ஊ.த.க. பிரிவு அரசு வாகனமான TN 22 G 7007 Bolero-ல் மதியம் சுமார் 15:40 மணிக்கு நான் பணிபுரிந்து வரும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகமான பழைய இராமநாதபுர ஆட்சியர் அலுவலக கட்டடம் அருகில் வந்த பின்னர், அவர்களை அழைத்துக் கொண்டு, திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் அமைந்துள்ள வளாகத்திற்குள் திருமங்கலம் சார்பு நீதிமன்றம் வாயில் அருகில் மதியம் சுமார் 16:40 மணிக்கு சென்று வாகனத்தை நிறுத்திவிட்டு, மேற்படி திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் அருகில் பொதுமக்கள் போல நின்று இரகசிய கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு, மாலை சுமார் 17:00 மணியளவில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலக கட்டடத்தின் தரை தளத்தில் வரவேற்பறைக்கு வடக்கு பக்கம் உள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவவக பகுதிக்கு சென்று, அந்த அலுவலக பகுதியில் தெற்கு பக்கம் சுவரில் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் என குறிப்பிடப்பட்டிருந்த இடத்தில் வடக்கு திசை நோக்கி போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து பணிசெய்து கொண்டிருந்த பின்னால் விசாரித்து தெரிந்து கொண்ட திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி. ராஜராஜேஸ்வரி அவர்களிடம் நான், என்னையும், என்னுடன் வந்திருந்த மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர்களான திரு.குமரகுரு, திருமதி.ஜெயப்பிரியா மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்து கொண்டு, மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள உள்ள விபரம் தெரிவித்தேன். பின்னர், அவரிடம் மேற்படி அலுவலகத்தின் வட்டாட்சியரை பற்றி விசாரித்த போது, அதற்கு திருமதி. ராஜராஜேஸ்வரி அவர்கள், திருமங்கலம் வட்டாட்சியர் திருமதி. முத்துலெட்சுமி என்றும், அவர் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கூட்டத்திற்கு சென்றுள்ளதாகவும், தற்போது மேற்படி அலுவலகத்திற்கு அவர்தான் பொறுப்பு அதிகாரி என்றும் தெரிவித்தார். எனவே அவரிடம் மேற்படி அலுவலகத்தை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள அனுமதி கேட்ட போது, அவர் அதற்கு சம்மதம் தெரிவித்தார். அதன்படி மேற்படி அலுவலக கட்டத்தின் தரைதளத்தின் வடக்கு பக்கம் உள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில், நான் காவல் ஆய்வாளர் திருமதி. ஜெயப்பிரியா அவர்கள் உதவியுடன் திருமதி. ராஜராஜேஸ்வரி அவர்களின் கைப்பையை சோதனையிட்ட போது அதில் ரூ.500/- இருந்தது. அதைப்பற்றி அவரிடம் விசாரித்த போது, அவர் அந்தப்பணத்தை தனது சொந்த செலவிற்கு வைத்திருப்பதாக கூறி தகுந்த முகாந்திரம் தெரிவித்ததால், அந்தப்பணம் அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது. அவரது இருக்கை முன்பிருந்த மேஜை மற்றும் அவரது உடமைகள் முழுமையாக சோதனையிடப்பட்டது. மேற்படி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் இருக்கைக்கு சற்று தள்ளி வடக்கு பக்கம் நின்று

கொண்டிருந்த பின்னர் விசாரித்து தெரிந்து கொண்ட, திரு.R.சிவன் கல்யாணி என்பவரை காவல் ஆய்வாளர் திரு. குமரகுரு அவர்கள் உதவியுடன் நான் விசாரித்த போது, அவர் திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலக நில அளவையர் பிரிவில், ஒப்பந்த அடிப்படையில் புல உதவியாளராக கடந்த 2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் பணி செய்து வருவதாகவும், தற்போது அலுவலகத்திற்கு கோப்புகளில் கையொப்பம் பெறுவதற்காக வந்ததகாவும் தெரிவித்து, அவரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.14,950/-யை (ரூ.500/- X 29, ரூ.100/- X 4, ரூ.50/- X 1) எடுத்து ஆஜர் செய்தார். அவரிடம் மேற்படி பணம் குறித்து விசாரித்த போது, அதற்கு அவர் ரூ.14,500/-யை முத்தூட் பைனான்ஸில் அடகு வைத்துள்ள நகையை திருப்புவதற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரிடம் அதற்கான ரசீது மற்றும் அதன் விபரங்களை கேட்ட போது அதற்கான ரசீது அவரிடம் இல்லை என கூறி அதற்கு சரியான முகாந்திரம் கூறவில்லை. ரூ.450/-யை தனது செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணத்தால் அப்பணம் ரூ.450/- (ரூ.100/- X 4, ரூ.50/- X 1) மட்டும் அவர் வசம் திரும்ப கொடுக்கப்பட்டது. அவரால் முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.14,500/- (ரூ.500/- X 29) மட்டும் அவரிடமிருந்து என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும், சந்தேகத்தின் பேரில் அவரது செல்போனில் பராமரித்து வரும் Gpay Application குறித்து கேட்ட போது, அவரது செல்போன் எண். 73395 09305 என்றும், அவருக்கு Bank of India சிந்துப்பட்டியில் வங்கி கணக்கு வைத்துள்ளதாகவும், அந்த வங்கி கணக்கை Gpay Application-யை பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார். அவரது சம்மத்தின் பேரில், அதில் வங்கி பரிவர்த்தனை விபரங்களை பார்வையிட்டதில், கடந்த 01.05.2026-ம் தேதி முதல் நேற்று (17.07.2026) வரை Gpay மூலமாக சுமார் ரூ.1,25,000/- சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் பரிவர்த்தனை செய்யப்பட்டிருந்தது. அவரிடம் அந்தப்பணபரிவர்த்தனை சம்பந்தமாக கேட்ட போது, தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. அதனைத்தொடர்ந்து சோதனையின் போது, மேற்படி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் இருக்கைக்கு வடக்கு பக்கம் கிழக்கு பகுதியில் தெற்கு நோக்கி போடப்பட்டிருந்த இருக்கையில் திருமதி. ராஜராஜேஸ்வரி அவர்களுக்கு முன்பு அமர்ந்து பணிசெய்து கொண்டிருந்த பின்னால் விசாரித்து தெரிந்து கொண்ட மேற்படி திரு. கண்ணன் என்பவரிடம் விசாரித்த போது, அவர் மேற்படி அலுவலகத்தில் தட்டச்சராக பணி செய்து வருவதாக கூறினார். அவரை காவல் ஆய்வாளர் திரு. குமரகுரு உதவியுடன் சோதனை செய்த போது, அவர் வசம் பணம் ஏதும் இல்லை. மேற்படி தட்டச்சர் இருக்கைக்கு வடக்கு பக்கம் தெற்கு நோக்கி போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த பின்னால் விசாரித்து தெரிந்து கொண்ட மேற்படி திருமதி. சந்தியா என்பவரிடம் விசாரித்த போது, அவர் மேற்படி இளநிலை வருவாய் ஆய்வாளராக

பணிபுரிவதாக கூறி அவர் கைப்பையில் வைத்திருந்த ரூ.570/-யை எடுத்து ஆஜர் செய்து, அதற்கு சரியான முகாந்திரம் தெரிவித்தார். அதன் காரணமாக அப்பணம் கைப்பற்றப்படவில்லை. அவரது இருக்கை, மேஜை ஆகியன சோதனையிடப்பட்டது. மேலும், அவருக்கு அருகில் நின்று கொண்டிருந்த பின்னர் விசாரித்து தெரிந்து கொண்ட மேற்படி திரு.S.சரவணக்குமார் என்பவரை காவல் ஆய்வாளர் திரு. குமரகுரு அவர்கள் உதவியுடன் விசாரித்த போது, அவர் செட்டிகுளம் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி அலுவலகத்திற்கு தான் பூமிதான பதிவேட்டை துணை வட்டாட்சியர் அவர்களிடம் ஒப்படைப்பதற்காக வந்ததாக தெரிவித்து, அவரது பேண்ட்டின் இடது பக்க பாக்கெட்டிலிருந்து ரூ.1,160/-யை எடுத்து ஆஜர் செய்து, அதற்கு சரியான முகாந்திரம் தெரிவித்தார். அதன் காரணமாக அப்பணம் கைப்பற்றப்படவில்லை. மேலும், திரு.சரவணக்குமாருக்கு அருகில் நின்று கொண்டிருந்த பின்னர் விசாரித்து தெரிந்து கொண்ட திரு.K.K.செந்தில்குமரன் என்பவரை காவல் ஆய்வாளர் திரு. குமரகுரு அவர்கள் உதவியுடன் விசாரித்த போது, அவர் பன்னிக்குண்டு வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி அலுவலகத்திற்கு நில அளவையரிடம் தங்கலாச்சேரி கிராம ஆக்கிரமிப்பு அறிக்கை பெற்று அந்த அலுவல் காரணமாக பணியில் உள்ளதாகவும் தெரிவித்து, அவரது சட்டையின் இடது பக்க மேல்பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.160/-யை எடுத்து ஆஜர் செய்து அதனை சொந்த செலவிற்கு வைத்திருப்பதாக கூறி தகுந்த முகாந்திரம் தெரிவித்தார். அதன் காரணமாக அப்பணம் கைப்பற்றப்படவில்லை. அதனைத்தொடர்ந்து, சோதனையின் போது மேற்படி வட்டாட்சியர் அலுவலக வரவேற்பறையின் தெற்கு பக்கம் உள்ள சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் அலுவலகம் சென்று, வட்டாட்சியர் அலுவலக அறையில் பணியில் இருந்த பின்னர் விசாரித்து தெரிந்து கொண்ட மேற்படி திருமங்கலம் சமூக பாதுகாப்பு திட்டம் வட்டாட்சியர் திரு. மூர்த்தி அவர்களிடம் நான் என்னையும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர்களான திரு. குமரகுரு, திருமதி. ஜெயப்பிரியா மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்து கொண்டு, மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள உள்ள விபரம் தெரிவித்த போது, அவர் அவரது அலுவலகத்தில் சோதனை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்தார். அதன்பேரில், திரு. மூர்த்தி அவர்களை காவல் ஆய்வாளர் திரு.குமரகுரு அவர்கள் உதவியுடன் நான் விசாரித்தபோது, அவர் தனது சட்டைப்பையில் வைத்திருந்த ரூ.250/-யை எடுத்து ஆஜர் செய்து, அதனை அவரது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறி அதற்கு தகுந்த முகாந்திரம் தெரிவித்தார். அவரது அலுவலக அறை முழுமையாக சோதனையிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அவரது அறைக்கு வடக்கு பக்கம் உள்ள அலுவலக அறையில் பணி செய்து கொண்டிருந்த பின்னர் விசாரித்து தெரிந்து கொண்ட மேற்படி திருமதி.பிரியதர்ஷணி என்பவரிடம் விசாரித்த போது, அவர் அவ்வலுவலகத்தில்

இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிவதாக தெரிவித்து, அவர் அவரது செலவுக்கு வைத்திருந்த அவரது சொந்தப்பணம் ரூ.150/-யை காண்பித்து அதற்கு தகுந்த முகாந்திரம் தெரிவித்தார். அவருக்கு அருகில் கிழக்கு திசையில் இருக்கையில் அமர்ந்து இருந்த, பின்னர் விசாரித்து தெரிந்து கொண்ட மேற்படி திருமதி. உமாராணி என்பவரிடம் விசாரித்த போது, அவர் அவ்வலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிவதாக தெரிவித்து, அவர் அவரது செலவுக்கு வைத்திருந்த அவரது சொந்தப்பணம் ரூ.200/-யை காண்பித்து அதற்கு தகுந்த முகாந்திரம் தெரிவித்தார். அந்த அலுவலக அறை முழுமையாக சோதனையிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து, சமூக பாதுகாப்பு திட்டம் வட்டாட்சியர் அறைக்கு தெற்கு பக்கம் உள்ள திருமங்கலம் மண்டல துணை வட்டாட்சியர் அலுவலக அறையில் பணி செய்து கொண்டிருந்த பின்னர் விசாரித்து தெரிந்து கொண்ட திரு. வீரக்குமார் என்பவரிடம் விசாரித்த போது, அவர் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருவதாகவும், 10 வாக்குசாவடி நிலைய அலுவலர்களுக்கு மேற்பார்வையாளராக உள்ளதாகவும் சொல்லி, அவரை பணிநிமித்தமாக சந்திப்பதற்காக அவருக்கு எதிரில் இருந்த மேற்படி கனகா மற்றும் ரமேஷ் ஆகியோர்களையும் அறிமுகப்படுத்தினார். மேற்படி வீரக்குமார் அவர்களை சோதனையிட்ட போது, அவரிடம் பணம் ஏதும் காணப்படவில்லை. மேற்படி திருமதி. கனகா அவர்களை விசாரித்த போது, அவர் தேர்தல் பணி சம்பந்தமாக மேற்படி வீரக்குமார் அவர்களை சந்திக்க வந்ததாக தெரிவித்தார். அவரை காவல் ஆய்வாளர் திருமதி. ஜெயப்பிரியா அவர்களின் உதவியுடன் சோதனையிட்ட போது, அவரது கைப்பையில் ரூ.2,600/- (ரூ.500/- X 5, ரூ.100/- X 1) இருந்தது. அதைப்பற்றி விசாரித்த போது, அவர் அதில் தனது சொந்த செலவிற்காக ரூ.600/- (ரூ.500/- X 1, ரூ.100/- X 1) வைத்துள்ளதாக தெரிவித்து அதற்கு மட்டும் தகுந்த முகாந்திரம் தெரிவித்தார். அது போக அவரிடமிருந்த மீதப்பணம் ரூ.2,000/- (ரூ.500/- X 4) குறித்து தகுந்த முகாந்திரம் கூறாததால் அப்பணம் அவரிடமிருந்து என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும், திரு. வீரக்குமார் அவர்களை சந்திக்க வந்திருந்த மேற்படி சாத்தங்குடி பிட் - 2 கிராம நிர்வாக அலுவலர் திரு. ரமேஷ் என்பவரை காவல் ஆய்வாளர் திரு. குமரகுரு அவர்களின் உதவியுடன் விசாரித்த போது, அவர் அவரது உயரதிகாரியான மேற்படி வீரக்குமார் அவர்களை பணி சம்பந்தமாக சந்திக்க வந்ததாக தெரிவித்து, அவரது பேண்ட்டின் வலது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.3,000/- (ரூ.500/- X 4, ரூ.200/- X 3, ரூ.100/- X 4) இருந்தது. அதைப்பற்றி விசாரித்த போது, தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. அவர் தனது சொந்த செலவிற்காக ரூ.500/- (ரூ.500/- X 1) வைத்துள்ளதாக தெரிவித்து அதற்கு மட்டும் சரியான முகாந்திரம் தெரிவித்தார். அது போக அவரிடமிருந்த மீதப்பணம் ரூ.2,500/- (ரூ.500/-X3, ரூ.200/- X 3, ரூ.100/- X 4) குறித்து தகுந்த முகாந்திரம் கூறாததால் அப்பணம் அவரிடமிருந்து என்னால் கைப்பற்றப்பட்டது. மேற்படி

மண்டல துணை வட்டாட்சியர் அலுவலக அறை முழுமையாக சோதனையிடப்பட்டது. மேற்படி மண்டல துணை வட்டாட்சியர் அலுவலக அறைக்கு மேற்கு பக்கம் உள்ள அலுவலக ஹாலில் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் நின்று கொண்டிருந்த பின்னால் விசாரித்து தெரிந்து கொண்ட மேற்படி திரு. செல்வம் என்பவரை விசாரித்த போது, அவர் ஆவண எழுத்தர் பாண்டியராஜன் என்பவரிடம் தனியார் நில அளவராக பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி அலுவலகத்திற்கு சாத்தங்குடி கிராமத்தில் வசிக்கும் சூரியன் என்பவரது இடத்திற்கு அருகே நடந்த நில அளவை சம்பந்தமாக சாத்தங்குடி பிட் - 1 நில அளவையர் அவர்களை பார்த்து விபரம் கேட்க வந்ததாக தெரிவித்து, அவரது பேண்ட்டின் வலது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.11,680/-யை **(ரூ.500/- X 23, ரூ.100/- X 1, ரூ.50/- X 1, ரூ.20/- X 1, ரூ.10/- X 1)** எடுத்து ஆஜர் செய்தார். அதைப்பற்றி அவரிடம் விசாரித்த போது, அவர் அதில் ரூ.5,000/-த்தை அவரது மகள் படிப்பு செலவிற்காக அவரது அண்ணனிடம் பெற்றதாக கூறி அதில் அவர் செலவழித்தது போக மீதி பணம் ரூ.4,680/- உள்ளது என தெரிவித்து அதற்கு சரியான முகாந்திரம் கூறியதால், அப்பணம் ரூ.4,680/- **(ரூ.500/- X 9, ரூ.100/- X 1, ரூ.50/- X 1, ரூ.20/- X 1, ரூ.10/- X 1)** அவர் வசம் திரும்ப கொடுக்கப்பட்டது. அது போக அவரால் சரியாக முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.7,000/- **(ரூ.500/- X 14)**த்தை என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும், திரு. செல்வம் அவர்கள் அவருக்கு இருதய நோய் இருப்பதாக தெரிவித்து, அதற்கு மருந்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார். அவரிடமிருந்து எழுத்துபூர்வமான வாக்குமூலம் என்னால் பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் மேற்படி அலுவலகத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்டார். மேலும், மேற்படி ஹாலில் மேற்கு பக்கம் கதவுக்கு அருகில் இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் விசாரித்து தெரிந்து கொண்ட மேற்படி தவச்செல்வி என்பவரை காவல் ஆய்வாளர் திருமதி ஜெயப்பிரியா அவர்கள் உதவியுடன் விசாரித்த போது, அவர் பணி நிமித்தமாக மேற்படி அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரது கைப்பையை காவல் ஆய்வாளர் திருமதி. ஜெயப்பிரியா அவர்கள் உதவியுடன் சோதனையிட்ட போது, அதில் ரூ.8,980/- **(ரூ.500/- X 10, ரூ.200/- X 1, ரூ.100/- X 35, ரூ.20/- X 13, ரூ.10/- X 2)** இருந்தது. அதைப்பற்றி விசாரித்த போது, அவர் அதில் தனது சொந்த செலவிற்காக ரூ.980/- **(ரூ.500/- X 1, ரூ.100/- X 4, ரூ.20/- X 4)** வைத்துள்ளதாக தெரிவித்து அதற்கு மட்டும் சரியான முகாந்திரம் தெரிவித்தார். அது போக அவரிடமிருந்த மீதப்பணம் ரூ.8,000/- **(ரூ.500/- X 9, ரூ.200/- X 1, ரூ.100/- X 31, ரூ.20/- X 9, ரூ.10/- X2)** குறித்து அவர் கடந்த ஜூன் மாதம் அவர் நகை அடகு வைத்ததில் மீதமுள்ள தொகை என தெரிவித்த முகாந்திரம் ஏற்கதக்கதாக இல்லாததால் அப்பணம் அவரிடமிருந்து என்னால் கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அலுவலக சோதனையின் போது, மேற்படி

அலுவலகத்தின் முதல் தளத்தில் வடக்கு பக்கம் அமைந்துள்ள நில அளவை பிரிவிற்கு சென்று பின்னர் விசாரித்து தெரிந்து கொண்ட வட்ட துணை ஆய்வாளர் திரு. செந்தில் அவர்களிடம், நான், என்னையும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர்களான திரு.குமரகுரு, திருமதி.ஜெயப்பிரியா மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்து கொண்டு, அவரை விசாரித்த போது, மேற்படி நில அளவை பிரிவுக்கு அவர்தான் பொறுப்பு அதிகாரி என தெரிவித்து, நில அளவையர்கள் களப்பணிக்கு சென்றுள்ளதாக தெரிவித்தார். எனவே மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள உள்ள விபரம் தெரிவித்து அவரது அனுமதி கேட்ட போது, அவர் அவரது அலுவலகத்தில் சோதனை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்தார். அதன்பேரில், திரு. செந்தில் அவர்களை காவல் ஆய்வாளர் திரு. குமரகுரு அவர்கள் சோதனை செய்து பார்த்த போது, அவரிடம் பணம் ஏதும் இல்லை. அதனைத்தொடர்ந்து நில அளவை பிரிவு அலுவலகம் முழுமையாக சோதனையிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி. ராஜராஜேஸ்வரி அவர்களிடம் கேட்டுக்கொண்டதன் பேரில், பின்வரும் பதிவேடுகளை அவர் ஆஜர் செய்தார். அவைகள் : 1. திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலக வருகைப்பதிவேடு சுருக்கம் 2026 (1 முதல் 65 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது), 2. திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலக வருகைப்பதிவேடு 2026 (1 முதல் 21 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது), 3. திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலக வெளிப்பணி விபரப்பதிவேடு 2026 (1 முதல் 61 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது), 4. திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலக தாமத வருகைப் பதிவேடு 2026 (1 முதல் 28 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது) ஆகியன ஆகும். மேலும், திருமதி. ராஜராஜேஸ்வரி அவர்கள், அவரது அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கான தனி நபர் பணம் கையிருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். பின்னர் நான் மேற்படி திடீர் இணை ஆய்வு நிகழ்வுகள் சம்பந்தமாக திரு.R.சிவன் கல்யாணி, திருமதி. கனகா, திரு. ரமேஷ், திரு. செல்வம் மற்றும் திருமதி. தவச்செல்வி ஆகியோரது எழுத்து பூர்வமான வாக்குமூலங்களை பதிவு செய்தேன். மேற்சொன்ன பதிவேடுகள் - 4 மற்றும் திடீர் இணை ஆய்வின் போது தகுந்த முகாந்திரம் கூறாமல் சந்தேகப்படும்படி வைத்திருந்த பணம் லஞ்சப்பணம் என கருதி மொத்தம் ரூ.34,000/- ஆகியவற்றை என்னால் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கோ, ஆவணங்களுக்கோ, உடைமை- களுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை. இந்த திடீர் ஆய்வு குறிப்புரை 17.07.2026-ஆம் தேதியன்று இரவு 23:00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் இணை ஆய்வுக்குறிப்புரையின் நகல் ஒன்று திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி. ராஜராஜேஸ்வரி அவர்களுக்கு வழங்கப்பட்டு, அதனை பெற்றுக்கொண்டமைக்கான அவரது ஒப்பம் பெறப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வுக்குறிப்புரை, திடீர் இணை ஆய்வின் போது

கைப்பற்றப்பட்ட தொகை மொத்தம் ரூ.34,000/- மேற்கண்ட அசல் பதிவேடுகள் - 4 மற்றும் 5 நபர்களுடைய வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்து, மேற்படி திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வின் போது கணக்கில் வராத பணம் வைத்திருந்த திரு.ரா.சிவன்கல்யாணி, திருமதி. மு.கனகா, திரு. ம.ரமேஷ், திரு. ம.செல்வம் மற்றும் திருமதி. மு.தவச்செல்வி ஆகியோர் மீதும், தனிநபர் பண கையிருப்பு பதிவேடு பராமரிக்காமல், அலுவலக நேரத்தில் மேலே சொன்ன ஐந்து நபர்களை கணக்கில் வராத பணத்தை வைத்திருப்பதற்கு அனுமதித்தாக தெரியவருவதால் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி. ராஜராஜேஸ்வரி மற்றும் நில அளவை பிரிவு வட்டதுணை ஆய்வாளர் திரு. செந்தில் ஆகியோர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இந்த அறிக்கையை அளிக்கிறேன். Sd/-XXXXXX (திருமதி. P. ஜெயஷர்மிளா) 18.07.2026 துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், மதுரை மாவட்டம். இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள் : 17.07.2026. 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.34,000/-. 3) திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட அசல் பதிவேடுகள் - நான்கு (4). 4) 2 அலுவலர்கள் மற்றும் 3 தனிநபர்களிடம் பதிவு செய்யப்பட்ட எழுதப்பூர்வமான வாக்குமூலங்கள்.

Sir, Received this report today (18.07.2026) at 12:45 hrs along with Joint Surprise Check Proceedings, dated 17.07.2026, Cash Rs. 34,000/-, Five statements and four Seized Registers. After obtaining permission from the Superior Officers, I registered a case in Madurai V&AC Crime No.09 / 2026 u/s 7, 7A of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 and 106 BNSS Act on 18.07.2026 at 13:30 hrs. Sd/- XXXXX 18/07/2026 (K. Kumaraguru) Inspector, V&AC, Madurai.

The original FIR along with report dated : 18.07.2026 of Tmt. P. Jeyasharmila, Joint Surprise Check Proceedings Dated : 17.07.2026, Statements of officials (2), Statements of Private Individuals (3) are submitted to the Hon'ble Principal District Judge, Principal District and Sessions Court, Madurai and other copies were sent to the officers concerned.

18/7/2026

(K. KUMARAGURU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Madurai
(18.07.2026)